Registered as a Newspaper

இறுதி மீட்டல்
வகுப்புக்கள்
கலை, வர்த்தகம் 86
ஆரம்பமாகிவிட்டன.
சனி, ஞாயிறு: காலை 8 மணி
DAY CLASS: காலை 8 மணி
குறிப்பிட்ட திகதிக்குப் பின்
அனுமதிகள் வழங்கப்பட
மாட்டாது.
VICKNA
TUITION CENTRE
52. Stanley Road,
JAFFNA.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ 1/-

புதிய 4வது பிரிவு
O/L
ஆரம்பம்:
3 - 3 - 86
DAY CLASS-காலை 8 மணி
EVENING CLASS-
பி.ப. 2.15
5, 6, 7, 8 - பி.ப. 2.15
VICKNA
TUITION CENTRE
52. Stanley Road.
JAFFNA.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸூ மாசி மீ 13 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ஜமா. ஆகிர் பிறை 15 (25-02-1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:85

### முச்சந்தி முரளி



உந்த ஒரு சாட்டுக் காணுமே.

அப்ப இனி வடக்கு, கிழக்குக்குத் தேவையான சாப்பாட்டுச் சாமானை ஏத்தி வரப் போற லொறியளும், முகாம்களைத் தரிசித்துத் தான் போக வேணும் வர வேணும் எண்டு சொல்லுங்கோவேன்...!

## இந்தியாவிலும் மேலைநாடுகளிலும்

# தஞ்சம் கோரிய தமிழர் நிலையை ஐ. நா. ஆராயும்

## அகதிகள் புனர்வாழ்வு ஆணையாளர் இங்கு வருகிறார்

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, பெப். 25

இந்தியா, மற்றும் சுவிட்சர்லாந்து, மேற்கு ஜெர்மனி, கனடா, பிரிட்டன் முதலிய நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் குறித்து ஐ. நா. ஸ்தாபனம் ஆராயும்.

மேற்சொன்ன நாடுகளில் இருக்கும் தமிழ் அகதிகள் குறித்து ஐ நா. வின் அகதிகள் புனர்வாழ்வுப் பிரிவு அறிக்கை ஒன்றைத் தயாரிக்க உள்ளது.

அதற்கு முன்னதாக ஐ நா. ஸ்தாபன அகதிகள் புனர்வாழ்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி திரு. மாக்மூட் எதிர்வரும் 27 ஆம் திகதி (வியாழக்கிழமை) இலங்கை வருகிறார்.

அவருடன் ஐ. நா. மனித உரிமை ஸ்தாபன பிரதிநிதி ஒருவரும் வருகிறார். இப்பிரதிநிதி வட இந்தியாவைச் சேர்ந்தவர்.

இந்தியா, சுவிட்சர்லாந்து, மேற்குஜெர்மனி, கனடா, பிரிட்டன் முதலிய நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் பற்றி ஐ. நா. அகதிகள் ஸ்தாபனம் அறிக்கை ஒன்றைத் தயாரிக்க உள்ளது.

அதற்கு முன்னோடியாக இலங்கை வந்து பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடவே அகதிகள் ஆணையாளர் இலங்கை வருகிறார்.

சுவிஸ் நாடு, அங்குள்ள தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப முன்னர் ஒரு முறை தீர்மானித்த போது, திருப்பி அனுப்ப வேண்டாம் என்று கோரிக்கை விடுத்த பிரிவு தான் இந்த ஐ நா. அகதிகள் நிறுவனம்.

அண்மையில் மதுரைக்கு வந்த ஐ நா. மனித உரிமைக் குழுப் பிரதிநிதி பேராசிரியர் ரொம் செட், இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல் பற்றி ஆராயவும்-

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண சம்பந்தப்பட்டவர்களுக்கு உதவவும் ஐ. நா. மனித உரிமை நிறுவனம் தனிக் கமிட்டி ஒன்றை நியமிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அது பற்றிய செய்தி உதயனில் வெளி வந்தது தெரிந்ததே.

## நகராட்சி தேர்தலில் தி.மு.க. முன்னணியில்

சென்னை, பெப். 24

தமிழ்நாடு நகராட்சித் தேர்தல் முடிவுகள் நேற்று அறிவிக்கப்பட்ட சமயம் தி. மு. க கூட்டணி தொடர்ந்து முன்னணியில் இருந்து வந்தது.

செய்தி அச்சுக்குப் போகும் சமயம் வெளிவந்த 49 முடிவுகளில் 29 இடங்கள் தி மு க. கூட்டணிக்கும் 13 இடங்கள் அ.தி.மு.க. - இந்திரா காங்கிரஸ் கூட்டணிக்கும் கிடைத்திருந்தன.

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் ஓர் இடத்தையும் சுயேச்சையாளர்கள் இரு இடங்களையும் கைப்பற்றி இருந்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகம் சிவகங்கை, மணற்பாடு, தென்காசி, ராணிப்பேட்டை, ஆரணி, மேட்டுப் பாளையம், நாமக்கல், இராமநாதபுரம், வேலூர், நாகபட்டினம், திருப்பத்தூர், தென்காசி, ஆற்காடு, பாளையங்கோட்டை, பொள்ளாச்சி, திருமங்கலம், கோவில்பட்டு, தாராபுரம் ஆகிய இடங்களில் வெற்றி பெற்றிருந்தது.

அண்ணா தி மு க. பவானி, சத்திய மங்கலம், திருவல்லிபுத்தூர், சாத்தூர், பொன்மலை, திண்டுவனம் ஆகிய இடங்களிலும் -

இந்திரா காங்கிரஸ் செங்கோட்டை, தர்மபுரி, திருவாரூர், தேனீ, பரமகுடி, இடப்பாடு ஆகிய இடங்களிலும் வெற்றி பெற்றிருந்தன.

கடந்த 15 வருட காலத்தில் முதல் தடவையாக இங்கு உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

## வடக்கு, கிழக்கிலிருந்து செல்லும்

# லொறிகள் பறிமுதல்

## உள்ளடக்கப் பட்டியல் எடுத்துச் செல்வது கட்டாயம்

— அலுவலக செய்தியாளர் வனிதராஜன் —

கொழும்பு, பெப். 25

வடக்கு, கிழக்கிலிருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்குப் போகும் லொறிகளில் ஏற்றிச் செல்லப்படும் பொருள்களின் விவரப் பட்டியலை சாரதிகள் வைத்திருக்க வேண்டும்.

விவரப் பட்டியலை எடுத்துச் செல்லாத அல்லது விவரப் பட்டியலுக்குப் புறம்பாக வேறு பொருள்களை ஏற்றிச் செல்லும் லொறிகளின் சாரதிகள், உதவியாளர்கள் கைது செய்யப்படுவர். அவர்கள் மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கும் தாக்கல் செய்யப்படும்.

சம்பந்தப்பட்ட லொறியும் பொருள்களும் பறிமுதல் செய்யப்படும்.

இது சம்பந்தமான அறிவுறுத்தல், கொழும்பு இராணுவத் தலைமை அலுவலகத்தில் இருந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## பிக்பொக்கட் நபர் மின் கம்பத்தில்

நல்லூர், பெப் 25

மூன்று வருடங்களாக "பிக்பொக்கட்' அடித்து வாழ்க்கை நடத்தி வந்தார் என்று கூறப்படும் 26 வயதுடைய இளைஞர் ஒருவன் நேற்று மொட்டை அடிக்கப்பட்டு. மின்கம்பத்தில் கட்டப்பட்டார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த க. இராசேந்திரம் என்ற இளைஞனே நேற்று யாழ் நகரில் மின் கம்பத்தில் கட்டப்பட்டவர் ஆவர்.

இவர் கடந்த மூன்று வருடங்களாக பஸ் நிலையங்களிலும், பொது இடங்களிலும் பிக்பொக்கட் அடித்து வந்தார் என்று சொல்லப்படுகிறது.

இவர் மீது சந்தேகம் கொண்ட இளைஞர்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள அகதிகள் ஊர் மக்கள் மோதல்

### அனுராதபுரத்தில் கடை சேதம்

கொழும்பு, பெப். 25

அனுராதபுரத்தில் முகாமிட்டுள்ள சிங்கள அகதிகளுக்கும் ஊர்மக்களுக்கும் இடையே நேற்று மோதல் ஏற்பட்டது. இதனால் சிங்களவருக்குச் சொந்தமான கடை ஒன்று அடித்து நொருக்கப்பட்டது.

அனுராதபுரம் பட்டினத்தில் சேனபுர என்னும் இடத்தில் 2,000 சிங்கள அகதிகள் முகாம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர்.

மன்னார், வவுனியா, திருகோணமலைப் பகுதிகளில் இருந்து வெளியேறிய சிங்களவர்களே இங்கு அகதிகளாக உள்ளனர். பொருள்கள் வாங்குவதில் ஏற்பட்ட தகராறே, அகதிகளுக்கும் ஊர் மக்களுக்கும் இடையே மோதலை ஏற்படுத்தியது

இரு பகுதியினருக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் அரச அதிகாரிகள் ஈடுபட்டு இருந்தனர்.

## சின்ன லெப்பை கார் கடத்தும் முயற்சி

மட்டக்களப்பு, பெப் 25

மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. ஜனாப் ரிஸ்வி அகமது சின்ன லெப்பையின் காரை கடத்த எடுக்கப்பட்ட முயற்சி கைவிடப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒல்லுக்குளம் என்னும் இடத்தில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டுவிட்டு ஜனாப். சின்னலெப்பை காத்தான்குடி திரும்பிக் கொண்டு இருந்தார்.

பாலமுனைச் சந்தி என்னும் இடத்தில் வைத்து அவரது காரை இனந் தெரியாத நபர்கள் வழிமறித்தனர்.

இது சொந்த வாகனம். அரச வாகனம் அல்ல என்று ஜனாப் சின்னலெப்பை கூறியதைத் தொடர்ந்து, அந்த நபர்கள் காரைக் கடத்தவில்லை.

அதன் பின்னர் அந்த வீதியால் வந்து கொண்டு இருந்த மினிபஸ் ஒன்று கடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## சுபநேரம்

25- 02 - 1986

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:

11-00 முதல் 12-30 வரை

ராகுகாலம்;

3-30 முதல் 5-00 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## வாகனங்களை உள்ளே கொண்டு செல்ல முடியாது

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ். பொலீஸ் நிலையத்துக்குச் செல்லும் பொலீஸ் அதிகாரிகள், ஊழியர்கள் அனைவரும் தங்களின் வாகனங்களை வெளியே விட்டு விட்டுச் செல்ல வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு நேற்று முதல் அமுலுக்கு வந்தது.

பொலீஸ் உயர் பீடம் இந்த உத்தரவை விடுத்துள்ளது.

கோட்டை முகாம் பாதுகாப்பைக் கருதியே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பதவி துறக்குமாறு மார்க்கோஸிடம் அமெரிக்கா கோரிக்கை

மணிலா, பெப், 24

பதவியில் இருந்து விலகும்படி பேர்டினன்ட் மார்க்கோஸை அமெரிக்கா கேட்டுக் கொண்டுள்ளது.

வெள்ளை மாளிகை இது தொடர்பான அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டது.

மார்க்கோஸ் ஆதரவுப் படைகளுக்கும் எதிர்ப்புப் படைகளுக்கும் இடையில் பெரும் சண்டை மூளும் சூழ்நிலை உருவாகிய சமயம் அமெரிக்காவின் இந்த வேண்டுகோள் வெளிவந்தது.

மார்க்கோஸுக்கு எதிரான கிளர்ச்சியாளர்கள் நேற்று டெலிவிஷன் நிலையம் ஒன்றைக் கைப்பற்றினர். அத்துடன் ஜனாதிபதி மாளிகை மீது ஹெலிக்கொப்டரில் இருந்து ராக்கெட் தாக்குதலும் நடத்தப்பட்டது.

மணிலாவிமான நிலைய தலைமையகத்துக்கு அருகில் நடந்த சண்டையை அடுத்து சகல விமானப் போக்குவரத்துகளும் ரத்துச் செய்யப்பட்டன. மணிலா பகுதியில் ஊரடங்கும் அமுலுக்கு வந்தது.

முடியுமானால் ஜனாதிபதி மாளிகைக்கு வந்து நேருக்கு நேர் மோதும் படி மார்க்கோஸ் கிளர்ச்சிக்காரர்களுக்கு சவால் விடுத்தார்.

## தங்கவேலாயுதபுரம் படுகொலை:

## ஆயுதப் படையை சேர்ந்த மூவர் கொண்ட விசாரணைக்குழு நியமனம்

கொழும்பு, பெப். 25

தங்கவேலாயுதபுரம் படுகொலைச் சம்பவம் பற்றி விசாரணை செய்ய அரசாங்கம் 3 பேர் கொண்ட விசாரணைக் குழு ஒன்றை நியமித்து உள்ளது.

குழுவின் தலைவராக கடற்படைத் தளபதி அட்மிரல் ஆனந்த சில்வா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஏனைய உறுப்பினர்கள் வருமாறு;

1. விமானப்படை குறூப் கப்டன் எம். ஜே. ஏ டி. எஸ். குணரத்தின.
2. பிரிகேடியர் ஜோர்ஜ் பெர்னாண்டோ.

இதனிடையில், இராணுவத் தளபதி நளின் செனவிரத்ன, புலனாய்வுப் பொலீஸ் இயக்குநர் மெரில் குணரத்தின ஆகியோர் இப் படுகொலை பற்றி விசாரணை செய்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

இரகசியப் பொலீஸாரும் விசாரணை நடத்துகின்றனர்.

### மட்டக்களப்பு பிரஜைகள் குழு அதிருப்தி

மட்டக்களப்பு, பெப், 25

தங்கவேலாயுதபுரம் படுகொலை பற்றி நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு பற்றி மட்டக்களப்புப் பிரஜைகள்குழு வட்டாரங்களில் பலத்த அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ள மூவரும் ஆயுதப்படை அதிகாரிகள்.

இக்குழுவில் பொதுமக்கள் பிரதிநிதிகள் எவரும் நியமிக்கப்படாததே அந்த அதிருப்திக்கு முக்கிய காரணம் என்று தெரியவருகின்றது.

விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது பற்றி இன்னும் மட்டக்களப்பு பிரஜைகள் குழுவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

உத்தியோக பூர்வமான அறிவித்தல் கிடைத்தவுடன் இதுபற்றி ஆராய்ந்து அறிக்கை ஒன்றை மட்டக்களப்புப் பிரஜைகள் குழு வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பிரேரணை மார்ச் 4, 5 இல்

கொழும்பு, பெப் 25

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணை மார்ச் 4ஆம் 5ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும்.

எதிர்க்கட்சி எம்.பிக்கள் கூட்டாக இந்த நம்பிக்கை இல்லாப் பிரேரணையைக் கொண்டு வருகின்றனர்.

பிரேரணை கடந்த வெள்ளிக்கிழமை சபாநாயகர் திரு. ஈ. எல். சேனநாயக்காவிடம் கையளிக்கப்பட்டது.

## அரச ஊழியர் கறுப்புப் பட்டி அணிந்து பேரணியில் கலந்து கொள்வர்

நல்லூர், பெப். 25

எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் வெகுஜன ஆர்ப்பாட்டப் பேரணியில் அரசாங்க ஊழியர்களை கறுப்புப்பட்டி அணிந்து கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தரைப் பாதுகாப்பு வலயம், கடல் பாதுகாப்பு வலயம் ஆகியவற்றை அகற்றுமாறு கோரி இப்பேரணி நடத்தப்படுகிறது.

15 க்கும் மேற்பட்ட அமைப்புக்கள் பேரணியில் கலந்து கொள்கின்றன.

பேரணி நடைபெறும் தினத்தில் கடைகள் முற்றாக மூடப்பட்டிருக்கும்.

அரச ஊழியர்கள் கறுப்புப்பட்டி அணிந்து செல்வர். வகுப்புக்களை பகிஷ்கரிக்கும்படி பாடசாலை மாணவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பேரணியில் கலந்து கொள்வோருக்கு வசதியாக மினிவான்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

மீனவர்களும் கடற்றொழிலுக்குச் செல்ல மாட்டார்கள்.

மீன் சந்தைகள், மரக்கறிச் சந்தைகள் முற்றாக மூடப்பட்டிருக்கும்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் கூட்டம் ஒன்றில் மேற்கண்ட தகவல்கள் வெளியிடப்பட்டன.

தனியார் கல்வி நிறுவனங்கள், மினித்தியேட்டர்கள் கூட இத்தினத்தில் இயங்கமாட்டா.

யாழ் சிவன் கோவிலடியில் ஆரம்பமாகும் இப்பேரணி, பிரதான வீதிகள் ஊடாகச் சென்று கச்சேரி நல்லூர் வீதி ஊடாக நல்லூர் கந்தசுவாமி கோயிலை அடைந்து அங்கு நடைபெறும் கூட்டம் ஒன்றுடன் நிறைவு பெறும்.

## குருநகர் கடல் பகுதியில் தீச் சுவாலை

நல்லூர், பெப் 25

குருநகரில் இருந்து ஐந்து மைல்களுக்கு அப்பால் உள்ள கடல் பகுதி ஒன்றில் நேற்று பெரிய தீச்சுவாலை காணப்பட்டது.

முதலில் புகைமண்டலம் கிளம்பியதாகவும் பின்னர் ஐந்து அடி உயரத்துக்கு தீச்சுவாலை காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதனால் அச்சம் கொண்ட மீனவர்கள் நேற்று ஆழ்கடலுக்கு போவதை நிறுத்திக் கொண்டனர்.

## வடக்கு, கிழக்கில் மீன்பிடி பாதிப்பு

கொழும்பு, பெப், 25

குழப்ப நிலை காரணமாக மீன் பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் மீன் உற்பத்தியில் அரைவாசி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து வந்தது.

இப்போது அது தடைப்பட்டுள்ளது.

இத்தகவலை கடற்றொழில் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா சொன்னார்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகைச்சுவை நடிகர் கதாநாயகனாக உயர்வு

நாடகத்தில் பயிற்சி பெற்று, சினிமாவில் நகைச்சுவை நடிகராக மிளிர்கிறார் கவுண்டமணி.

கவுண்டமணியின் நகைச்சுவை பாணி ரசிகர்கள் மத்தியில் புதிய அலையாக பரவி வருகிறது.

தற்போது கதாநாயகனாக உயர்ந்துள்ள அவர் மக்கள் ரசனைக்கேற்ப நடிக்க வேண்டும் என்று ஆவலாக உள்ளார்.

இவருக்கு ரசிகர் மன்றங்களும் இருக்கின்றன. படம் ரிலீசாகும்போது பேனர் கட்டுவதோடு நின்றுவிடாமல் மன்றங்களைப் பொதுச் சேவைகளிலும் சேவை புரியச் செய்துள்ளார்.

பழைய நிலைமையை மறக்காமல் நண்பர்களைச் சந்தித்துப் பேசுகிறாராம். காரில்தான் செல்ல வேண்டும் என்று எண்ணாமல் நடந்து செல்லவும் தயாராக உள்ளேன் என்கிறார் அவர்.

அவர் தமது அன்றாட நடவடிக்கைகள் பற்றிச் சொன்ன போது;

தினமும் அதிகாலையில் கடற்கரைக்குச் சென்றுவிடுவேன் இரண்டுமைல் காலாற நடந்து செல்வேன்.

இந்த வேளையில் 'காமெடி' சீன்களை எப்படி அமைத்தால், நடித்தால் எடுபடும் என்று யோசித்துக் கொண்டே செல்வேன்.

யாருடைய படம் என்றாலும் கதை கேட்காமல் நடிக்கமாட்டேன். கதை நன்றாக இருக்கும் பட்சத்தில் மட்டுமே முழு ஈடுபாட்டோடு நடித்துக் கொடுப்பேன். அல்லும் பகலும் நான் உழைக்கத் தயங்க மாட்டேன் என்றார் கவுண்டமணி.

அவர் தமது ஆரம்ப காலத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

'உடுமலையில் பிறந்தேன். அங்கே உயர் நிலைப் பள்ளியில் படித்தேன். பன்னிரண்டு வயதில் திருச்சி ஜி எஸ் நாடக சபாவில் நடிக்க ஆரம்பித்தேன்.

அதன்பிறகு 65இல் சென்னை வந்து 76 வரை நாடகங்களில் நடித்தேன் 77இல் சினிமா உலகப் பிரவேசம்' என்றார்.

தினசரி சினிமா

## திருமதி ருக்மணி அருண்டேல் காலமானார்

சென்னை, பெப். 24

திருமதி ருக்மணி அருண்டேல் தமது 82வது வயதில் சென்னையில் காலமானார்.

அன்னிபெசன்ட் அம்மையாரின் தியோஸபிக்கல் சொஸைட்டி என்ற பிரம்மஞான சங்கத்தில் ஈடுபட்டு நீண்டகாலம் பணியாற்றினார்.

அவரது பணிகளுக்காக பாரத அரசு பத்மபூஷன் விருது வழங்கி அவரைக் கௌரவித்தது

நீண்ட கால ராஜ்யசபை உறுப்பினராகவும் பணியாற்றிய திருமதி அருண்டேல் மிருக நலன் பேணும் இயக்கத்திலும் ஈடுபட்டு உழைத்தவராவார்.

# அவசரகால சட்டம் பிலிப்பீன்ஸில் பிரகடனம்

## வெகுஜன இயக்கத்துக்கு மார்க்கோஸ் தாக்குப் பிடிக்கமுடியாத சூழ்நிலை

மணிலா, பெப். 24

பிலிப்பீன்ஸில் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அங்கு எழுந்துள்ள தீவிர வெகுஜன இயக்கத்துக்குத் தாக்குப் பிடிக்க முடியாத சூழ்நிலையிலேயே ஜனாதிபதி மார்க்கோஸ் அவசரகால சட்டத்தை அங்கு பிறப்பித்துள்ளதாக கூறப்படுகிறது.

பிலிப்பீன்ஸ் இராணுவ பாசறைகள் பலவற்றையும் திருமதி அக்கியூனோ ஆதரவாளர்கள் திரண்டு சூழ்ந்து நிற்பதாகவும் பீரங்கி, கவசவாகனப் படைகள் இதற்குள் அகப்பட்டு திண்டாடுவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இந்த இடங்களில் சூழ்ந்துள்ள மக்கள் மீது மார்க்கோஸ் ஆதரவு இராணுவம் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசிய போதிலும் மக்கள் உறுதியாக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

திருமதி கொரசன் அக்கியூனோவும் அவரது ஆதரவாளர்களும் வெளி உலகின் வேறு பல நாடுகளும் மார்க்கோஸ் உடனடியாகப்பதவியிலிருந்து இறங்கிவிடவேண்டுமென கேட்டு வருவது தெரிந்ததே

திருமதிஅக்கியூனோவை ஆதரித்து எழுந்துள்ள பிலிப்பீன்ஸ் பாதுகாப்பு அமைச்சர் இவான் பொன்ஸ் என்ட்றேலியையும் ஆயுதப்படைகளின் பதில் தளபதி பிடல் றமோஸையும் ஆதரிக்குமாறு அமெரிக்கா பகிரங்கமாக பிலிப்பீன்ஸ் மக்களைக் கேட்டுள்ளது.

மக்கள் எழுச்சியை அடக்க மார்க்கோஸ் இராணுவத்தைப் பயன்படுத்தினால் அமெரிக்காவின் இராணுவ உதவிகள் உடனடியாக நிறுத்தப்படும் எனவும் ஜனாதிபதி றேகன் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

இதற்கிடையில் பிலிப்பீன்ஸ் கெடுபிடிகளை ஆராய்வதற்காக அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு சபையைக் கூட்டுமாறு றேகன் கேட்டுள்ளதாகவும் நம்பப்படுகிறது.

எந்த வடிவில் எதிர்ப்புகள் வந்தாலும் தான் பதவியில் இருந்து இறங்கப் போவதில்லை எனவும் பிலிப்பீன்ஸ் கலவரங்கள் உடனடியாக அடக்கப்படும் எனவும் மார்க்கோஸ் தெரிவித்துள்ளார்.

திட்டமிட்டபடி பதவி ஏற்பு வைபவம் நடைபெறும் எனவும் வெளிநாடுகளின் இராஜதந்திர பிரமுகர்கள் இதில்கலந்து கொள்வார்கள் எனவும் அவர் மேலும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## ஆற்று விபத்தில் அவல மரணம்

புதுடில்லி, பெப். 24

குஜராத் மாநிலத்தில் நெஸ்யோ ஆற்றில் நேர்ந்த விபத்தொன்றில் பலர் இறந்துள்ளனர்.

இந்த விபத்தில் 13வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட 12 மாணவிகளும் 2 ஆசிரியைகளும் 1 ஆசிரியரும் உயிரிழந்துள்ளனர்.

## வர்த்தக ஒப்பந்தம்

புதுடில்லி, பெப். 24

பாரத– இந்தோனேஷிய வர்த்தக ஒப்பந்தமொன்றுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இருதரப்பு ஒப்பந்தம் பற்றிய பேச்சுக்கள் பாரத இந்தோனேஷிய வர்த்தகத்துறைச்சார்ந்த அதிகாரிகளுக்கிடையில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## மட்றிட் நகரில் ஆர்ப்பாட்டம்

மட்றிட் பெப். 24

ஸ்பெயினில் மிகப்பெரிய அளவிலான ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெற்றுள்ளது.

பெருந் தொகையான இடதுசாரி ஆதரவாளர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்க அரசுஎதிர்ப்புச் சுலோகங்களையும், வட அத்திலாந்திக் ஒப்பந்த அமைப்புகளுக்கு எதிரான சுலோகங்களையும் அவர்கள் ஆவேசமாகக் கோஷித்துக்கொண்டு சென்றதாக மேலும்தெரிவிக்கப்படுகிறது.

## ஜனாதிபதி றேகனுக்கு கடிதமூலம் மிரட்டல்

### தீவிர தேடுதலின் பின் சந்தேகநபர் கைது

ஒகியோ, பெப். 24

ஜனாதிபதி றேகனை மிரட்டியதாக நம்பப்படும் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

றொனல்ட் மிச்செல் (வயது 30) என்ற இந்த நபர் பரந்த அளவிலான தேடுதல் வேட்டையை அடுத்தே கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

1985ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஜனாதிபதி றேகனை மிரட்டி இரண்டு கடிதங்களை இவர் எழுதியதாகக் கூறப்படுகிறது.

எனினும் இந்தவிடயம் தொடர்பாக மேலதிக தகவல்கள் எதனையும் வெளியிட அமெரிக்க இரகசிய சேவைப் பிரிவு மறுத்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





## பாதுகாப்பு சபையிடம் ஈரான்-ஈராக் முறையீடு

### யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவர முயற்சிக்குமாறு வேண்டுகோள்

லண்டன், பெம். 24

ஈரான் - ஈராக் ஆகிய இரு நாடுகளும் யுத்த நிறுத்தத்தை அமுலுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையைக் கோரியுள்ளன.

இரு நாடுகளின் முறைப்பாடுகள் தொடர்பாகவும் ஆராய பாதுகாப்பு சபையின் அவசர கூட்டம் இன்று நடைபெறுகிறது.

இரு நாடுகளும் தமது பாதிப்புக்களையும் இவை தொடர்பான முறைப்பாடுகளையுப் பாதுகாப்பு சபைக்கு ஏற்கனவே தெரிவித்துள்ளன.

இது இவ்வாறிருக்க, ஈரான் கைப்பற்றிய தனது கேந்திர நிலைகள் பலவற்றையும் தான் திரும்பவும் மீட்டுக் கொண்டுள்ளதாக ஈராக் தெரிவித்துள்ளது.

அல்ப்பா பகுதிகளிலும் பாஸ்ரா துறைமுகப் பகுதிகளிலும் உள்ள தொடர்பு முக்கியத்துவம் வாய்ந்த கேந்திரங்களே அவை என ஈராக் மேலும் தெரிவித்தது.

ஈராக்கின் எல்லைப் பகுதியில் பல இடங்களை தான் கைப்பற்றி முன்னேறியுள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது.

எனினும் சண்டை உக்கிரத்தால் உயிரிழப்புகள் அதிக அளவில் இடம் பெற்றுள்ளதாகவும் பல பெரிய கட்டடங்கள் தகர்ந்துள்ளதாகவும் செய்திகளில் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மூதூரில் கைதான பெண்கள்

## இருவரைத்தவிர சகலரும் விடுதலை

திருகோணமலை, பெப். 25

மூதூரில் கைதான 43 தமிழ் இளம் பெண்களில் 2 பேரைத் தவிர ஏனையோர் விடுவிக்கப்பட்டுவிட்டனர்.

சிவஞானம் ரஜனி, சோமசுந்தரம் சுபத்திரா ஆகியோரே மேல் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

கடைசியாக 11 இளம் பெண்கள் கடந்த வாரம் விடுவிக்கப்பட்டனர்.

திருமலை பிரஜைகள் குழுவின் சார்பில் திரு. சி. எம். கணேசலிங்கம் இவர்களைப் பொறுப்பு எடுத்து பெற்றோரிடம் ஒப்படைத்தார்.

## தவறணைகளில் நடந்த களவு

நாகர்கோவில், பெப். 25

பருத்தித்துறை - புலோலி தெங்கு பனம் பொருள் உற்பத்திச் சங்கத்தின் பருத்தித்துறை, புலோலி மேற்கு கிளைகளுத் தவறணைகள் உடைக்கப்பட்டுள்ளன.

இங்கிருந்த பனம் சாராயம் காய்ச்சுவதற்குரிய கள்ளும் கிளையின் தளபாடங்களும் களவாடப்பட்டுள்ளன என்று பிரதம சங்கத்துக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

## மிஷன் இளைஞர்களும் கைது!

மட்டக்களப்பு, பெப். 25

மட்டக்களப்பு, கோப்பாவெளி மரப்பாலம் என்ற இடத்தில் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்ட 40 தமிழ் இளைஞர்களில் இராமகிருஷ்ண மிஷனில் பணியாற்றும் 5 இளைஞர்களும் உள்ளனர்.

இப்படி மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஜீவானந்தஜி மட்டக்களப்பு இணைப்பு அதிகாரியிடம் முறையிட்டார்.

இது சம்பந்தமாக எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தன்னைச் சந்திக்கும்படி இணைப்பதிகாரி, சுவாமி ஜீவானந்தஜிக்கு அறிவித்துள்ளார்.

### பயிற்சி

கடவுச்சீட்டுள்ள இருபாலாருக்கும் தெரிவு செய்யும் தொழிலுக்கேற்ற அரபுமொழி பேச்சுப் பயிற்சியுடன் சகலதும் இலவசம். மொத்தமாக எழுபத்தைந்து வெற்றிடங்கள் சகல தொழில்களுக்கும் உண்டு கல்வி, அனுபவ விபரத்துடன் சுய விலாசமிட்ட முத்திரையுறையுடனும் ஐந்து தினங்களுக்குள் தாமதத்தை தவிர்க்க யாழ்ப்பாண தபால் பதுதியில் விண்ணப்பத்தை அனுப்பவும் வினம்பர இலக்கம்: 9, உதயன் மே பா., 15, 2ஆவது ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

## மினிவான் சாரதி மின்சாரத்துக்கு பலி

சாவகச்சேரி, பெப். 25

கைதடி நுணுவில் மினிவான் சாரதி ஒருவர் மின்சாரம் தாக்கி மரணமானார்.

மினிசினிமாவுக்கு மின் இணைப்பை ஏற்படுத்த முற்பட்டபோதே இது சம்பவித்தது.

ஒரு பிள்ளைக்குத் தகப்பனான 27 வயது இளைஞர் தம்பையா அருட்சோதியே மரணம் ஆனவர்

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. என். தர்மேந்திரன் மரணவிசாரணையை நடத்தினார்.

இறந்தவரின் மனைவி சாந்தினி தமது சாட்சியத்தில் இருவருடங்களின் முன் தாம் திருமணம் செய்து கொண்டதாகவும் ஒரு பெண்பிள்ளைக்குத் தந்தையான தனது கணவர் கொக்கத்தடி கொண்டு செப்புக் கம்பிகளை மின்சாரக் கம்பியில் பொருத்த முயற்சித்த போது மின்சாரத் தாக்குதலுக்கு ஆளானார் எனவும் கூறினார்.

மேலும் சாட்சிகளை விசாரணை செய்ததைத் தொடர்ந்து விபத்து மரணம் எனத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

சட்டவிரோத மின்பாவனைகளால் உயிரிழப்பு அதிகரித்து வருவதையிட்டு கவலை தெரிவித்த மரண விசாரணை அதிகாரி இதனைத்தடுக்க [illegible] ரால் எடுக்கப்பட்ட முயற்சிகள் ஓரளவு [illegible] அளித்த போதிலும் [illegible] மைப்பு இன்மையால் [illegible] ஏற்படவில்லை என்றார்.





தங்கவேலாயுதபுரம் படுகொலை:

## பிரஜைகள் குழு வாக்குமூலம் பெற ஏற்பாடு

மட்டக்களப்பு, பெப். 25

தங்கவேலாயுதபுரம் படுகொலையினால் பாதிக்கப்பட்டவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்ய மட்டக்களப்புப் பிரஜைகள் குழு உறுப்பினர்கள் ஏரபாடு செய்துள்ளனர்.

இச்சம்பவத்தில் மரணமானவர்களில் 8 பேர் நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.

இதனிடையில் அம்பாறை மாவட்ட அபிவிருத்திச்சபையின் முன்னாள் உறுப்பினரும் கூட்டணிப் பிரமுகருமான திரு. கா. வேல்முருகு தங்கவேலாயுதபுரம் படுகொலையைக் கண்டித்து அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

மனித இதயம் படைத்த எவரும் இச்சம்பவத்தைக் கண்டிக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் திரு வேல்முருகு தெரிவித்துள்ளார்.

## தெல்லிப்பளை சுகாதார பெரும்பிரிவு

### கிராமங்களும் உறுப்பினர்களும்

பலாலி, பெப். 24

தெல்லிப்பளை சுகாதாரப் பெரும் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட ஏழு கிராமங்களும் குழு உறுப்பினர்களும் பின் வருமாறு:–

1. பத்தாவத்தைக் கிராமம் தலைவர்: திரு எஸ். சிவனேசன், செயலாளர்: திருமதி. பி. வேதநாயகம், குழு உறுப்பினர்கள்: திரு. பத்மநாதன், திரு. குழந்தைவேலு.

2. பன்னாலைக் கிராமம் தலைவர்: திரு. தா. திருநாவுக்கரசு (ஆசிரியர்) செயலாளர்: திரு. ச. சுப்பிரமணியசுவாமி உறுப்பினர்கள்: திரு. க. முத்துக்குமாரசுவாமி திருமதி எஸ். பொன்னுத்துரை திரு. வை. பொன்னையா.

சித்தியம்புளியடிக் கிராமம்: தலைவர்: திரு க. இராசதுரை, செயலாளர்: திரு. க. வேலாயுதம், உறுப்பினர்கள்: திரு. வே கந்தசாமி, திரு. ஐ. பரம்சோதிநாதன், திரு. நா. தவபாலு.

4. கோட்டைக்காடு கிராமம்: தலைவர்: திரு. ச. தவராசா செயலாளர்: செல்வி. சி. உதயமலர் உறுப்பினர்கள்: செ. அன்னலிங்கம், செல்வி. க. குமுதினி, திருமதி. ஸ்ரீயோகாம்பிகை.

5. மத்தலோடைக் கிராமம்: தலைவர்: திரு. சி. முத்துலிங்கம் செயலாளர்: செல்வி. கி. கமலா உறுப்பினர்கள்: மு. செல்வரத்தினம், ஆ. லக்ஷ்மணன் செல்வி. இ. வசந்தா.

6. கும்பழா கிராமம்: தலைவர்: திரு. த. விஜயசிங்கம் செயலாளர்: திருமதி. நா. நடராசா உறுப்பினர்கள்: மு. சுந்தரலிங்கம், க செல்வராசா, எஸ். பொன்னுத்துரை.

7. தையிட்டிக் கிராமம்: தலைவர்: திரு. மா. நாகேந்திரசிலன் (ஆசிரியர்) செயலாளர்: திரு. ம. [illegible] உறுப்பினர்கள்: செ. இரதமோகன், சி. கிருபாகரன், மு. சற்குணம்.

ஒவ்வொரு குழுவும் இயங்குவதற்கும்– செயல் திட்டங்களை நிறைவேற்றவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## விவசாய ஊக்குவிப்பு மூலம் வாழ்க்கைத் தரம் உயரும்

### உரவார பரிசளிப்பு விழாவில் உரை

கரவெட்டி, பெப். 25

விவசாயத் துறையை ஊக்குவிப்பதன் மூலமே மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தவும் முடியும்.

யாழ். உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. எஸ். கணேசானந்தன் இப்படிக் கூறினார்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றயாழ் தேசிய உரவார பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் உரைநிகழ்த்தினார்.

விழாவிற்கு கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு ஐயாத்துரை தலைமை வகித்தார்.

திருமதி எஸ். கணேசானந்தன் தொடர்ந்து பேசுகையில், விவசாய அபிவிருத்திக்கு அரசாங்கம் வழங்கும் உதவிகள் முறையாகப் பயன்படுத்தப் படவேண்டும். மாணவர்களுக்கு விவசாய அபிவிருத்தி பற்றிய அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும் என்றார்.

விழாவிற்கு தலைமை வகித்த உதவி அரசாங்க அதிபர் உரையாற்றுகையில் மாணவ மாணவிகள் இக்காலகட்டத்தில் விவசாய அறிவை வளர்க்க வேண்டியது மிகவும் அவசியம்.

மாணவர்களின் விவசாய அறிவை வளர்ப்பதற்கு அதிபர்களும் கவனஞ் செலுத்த வேண்டும் என்றார்.

உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன்பாடசாலைஅதிபர் திருமதி பரமேஸ்வரி இராஜசிங்கம், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு. ஜேய். கந்தராஜா, தேவரையாழி இந்துக் கல்லூரி அதிபர் திரு. ஆ. இரத்தினசபாபதி ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

போட்டியில் முதலாம் இடத்தை செல்வி கீதா கனகசபாபதி (உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி) இரண்டாம் இடத்தை செல்வி இராஜேஸ்வரி சுப்பிரமணியம் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி) மூன்றாம் இடத்தை செல்வி. ஸ்ரீ பவானிபொன்னுத்துரை (தேவரை ஆழி இந்துக் கல்லூரி)ஆகியோர் பெற்றனர்.

## மீண்டும் ஜனாதிபதி ஆணைக்குழு

கொழும்பு, பெப். 25

அமைச்சர்கள், நாடாளுமன்றப் பிரதிநிதிகள், அரச அதிகாரிகளுக்கு எதிராகச் சுமத்தப்படும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரிக்க 3 நீதியரசர்கள் கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட உள்ளது.

## தனியே இருந்த பெண்ணிடம் கொள்ளை

### உடுவிலில் சம்பவம்

மானிப்பாய், பெப். 25

வீட்டில் தனியே இருந்த பெண்ணிடம் இனந்தெரியாத இரண்டு நபர்கள் நகைகளை அபகரித்துச் சென்றனர்.

உடுவில் டச் வீதியில் புதிய வீடொன்றைக் கட்டி அண்மையில் குடிபுகுதல் நடத்திய திரு.க. சந்திரலிங்கம் என்பவரின் வீட்டிலேயே இக்கொள்ளை நடந்தது.

கொள்ளை நடந்த வேளையில் திரு க.சந்திரலிங்கம் வீட்டில் இருக்கவில்லை.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

திருமதி சந்திரலிங்கம் சுகவீனம் காரணமாக 'ஹோலில்' படுத்திருந்த வேளையில், துப்பாக்கிய ஏந்திய நபர்கள் இருவர் திடீரென வீட்டினுள் புகுந்தனர்.

தாம் விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், விடுதலை இயக்கங்களுக்கு நீங்கள் ஆதரவு தருவதில்லை என்றும் துப்பாக்கியைக் காட்டி அவர்கள் பயமுறுத்தினர்.

திருமதி. சந்திரலிங்கத்தை சுவாமி அறைக்குள் அவர்கள் கூட்டிச் சென்றனர்.

அவர் அணிந்திருந்த சங்கிலி, காப்பு, தோடு, மோதிரம் போன்றவற்றைக் கழற்றிக் கொடுக்குமாறு அவசரப்படுத்தினர்.

நகைகளை பெற்றுக் கொண்டு, திருமதி சந்திரலிங்கத்தையும் அவரின் சிறு பிள்ளையையும் வீட்டினுள் வைத்து பூட்டிய பின்னர் கொள்ளைக்காரர்கள் ஓடித் தப்பினர்.

பகல் மூன்று மணியளவில் இக் கொள்ளை நடந்தது. கொள்ளை போன நகைகளின் பெறுமதி ரூபா 15 ஆயிரம்.

கொள்ளையடித்த நபர்கள் சாரம் அணிந்திருந்தனர் முகமூடி அணிந்திருக்கவில்லை.

உடுவில் கிராமப்பகுதியில் இது போன்ற கொள்ளைகள் அடிக்கடி நிகழ்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

பணம், புகழ், படிப்பு பலன் தரா. அன்புதான் பலன் தரும்.

- சுவாமி விவேகானந்தர்.


# உதயன்

உண்மை - சுதந்திரம் - நடுநிலைமை

இல. 15, 2வது ஒழுங்கை, ... வீதி, யாழ்ப்பாணம்.    தொலைபேசி: 24806 22078    25-02-86    உ. கெ. 23


## இலங்கை - தமிழகம் - இந்தியா

இலங்கையில் தமிழர்கள் இனப் படுகொலை செய்யப்படுகிறார்கள். இதனை எம்மால் இனியும் சகித்துக்கொண்டு இருக்க முடியாது.

இவ்வாறு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியிடம் முறைப்பாடு செய்திருக்கிறார்.

தாவடியில் நடந்த விமானக் குண்டு வீச்சு, அக்கரைப்பற்றில் நடந்த கொடூரக் கொலைகள் என்பனவற்றை எடுத்தக்காட்டி இலங்கையில் நடக்கும் இனப் படுகொலைகளை இந்தியப் பிரதமருக்கு தொலைபேசியில் தாமே விளக்கி இருக்கிறார் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர்.

* இலங்கை அரசு திட்டமிட்டுச் செய்து வரும் இனக் கொலைகள் காட்டுமிராண்டித்தனமானவை.
* எந்த ஒரு நாட்டிலும் அரசின் ஆயுதப் படைகள் சொந்த நாட்டு மக்களை இப்படி ஈனத்தனமாகக் கொலை செய்தது கிடையாது.
* வெளிநாடுகளில் இருந்து தருவிக்கப்பட்ட நவீன ஆயுதங்களுடன் விமானத் தாக்குதல்களையும் நடத்த இலங்கை அரசு தொடங்கிவிட்டது.
* இனப்பிரச்சினையைச் சாட்டாக வைத்து அப்பாவித் தமிழர்கள் கொலை செய்யப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

இந்தியப் பிரதமர் ராஜீவுடன் 20 நிமிட நேரம் நடத்திய கருத்துப் பரிமாறலின் போது, முன்கண்ட நான்கு முக்கிய அம்சங்களை எம். ஜி ஆர். எடுத்துரைத்திருக்கிறார். நிலைமையை மிகத் தெளிவாக விளக்கி இருக்கிறார்.

இந்த நான்கு அம்சங்களையும் உதயன் இப்பத்தியில் ஏற்கனவே பல தடவைகள் ஆணித்தரமாக எடுத்தியம்பியதை வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

இலங்கை அரசாங்கம் அரசியல் தீர்வு, சமாதானப் பேச்சு என்று நாடகம் ஆடிக்கொண்டு இராணுவ நடவடிக்கை மூலம், தான் நினைத்த தீர்வைத் திணிக்கவும் தமிழ் இனத்தை அழித்தொழிக்கவும் திட்டமிட்டு இருக்கிறது. — இந்தப் பெரிய உண்மையை இந்திய மத்திய அரசு உணர வேண்டும்.

அந்தப் பொறுப்பு தமிழகத்தையே பெரிதும் சார்ந்தது. இரத்தத்தின் இரத்தங்களுக்குத்தான் தமது சகோதரர்கள் படும் துன்பத்தையும், துயரத்தையும் மற்றவர்களைவிட அதிகம் உணரமுடியும்.

இலங்கை அரசு இப்போதைக்குப் பிரச்சினையைத் தீர்த்து வைக்காது என்பதை மட்டும் நாம் உறுதியாகச் சொல்ல முடியும். ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அரசு, தான் பதவியில் நீடிப்பதற்கு, இனப்பிரச்சினை தனக்குக் கிடைத்த சஞ்சீவி என்று கருதிச் செயற்பட்டு வருகிறது. இதனை திரு. ராஜீவ் காந்தி நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

அவர் எடுக்கும் மாற்று நடவடிக்கைகளில் ஒன்றாக யாழ். மக்கள் மன்றம் வைத்த யோசனையையும் பரிசீலனை செய்து பார்க்கலாம் என்று நாம் கருதுகிறோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அடங்கிய தமிழர் தாயகத்தின் நிர்வாகத்தை பொது நல நாடுகளின் கூட்டமைப்பின் பொறுப்பில் ஒப்படைக்க வேண்டும்.—

இந்தியா, அவுஸ்திரேலியா, பிரிட்டன் ஆகிய மூன்று நாடுகளையும் கொண்ட கூட்டமைப்பு மூலம் காபந்து நிர்வாகம் ஒன்றை உருவாக்க வேண்டும் —

அந்தக் காபந்து அரசாங்கம் ஒரு வருட காலத்துக்கு தமிழ் தாயகத்தில் நிர்வாகத்தை நடத்தலாம்,—

அதே வேளை தமிழ்ப் பகுதிகளிலிருந்து இராணுவத்தை வாபஸ் பெற வேண்டும்.—

சீர்குலைந்த சிவில் நிர்வாகத்தை சீர் அமைக்கலாம்.—

தமது பாரம்பரிய மண்ணிலிருந்து விரட்டப்பட்ட தமிழ் மக்களை மீண்டும் அங்கு குடியமர்த்தலாம் —

இவற்றை செய்து கொண்டே சமாதானப் பேச்சு மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்.

யாழ். மக்கள் மன்றம் முன்வைத்த இந்த ஆலோசனைகள் பரிசீலனை செய்யப்பட வேண்டியவை.

தமிழீழக் கோரிக்கையை கைவிட்டால் தான் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று அரசாங்கம் நிபந்தனை விதித்துக்கொண்டிருக்கவும் —

அந்த நிபந்தனையைக் கைவிட்டால் தான் பேச்சுவார்த்தைக்குப் போகமுடியும் என்று தமிழர் குழுக்கள் கூறிக்கொண்டிருக்கவும் —

பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் முட்டுக்கட்டை ஏற்பட்டுக் கொண்டே இருக்கும்.

காமன்வெல்த் கூட்டமைப்பு நிர்வாகம் என்ற தற்காலிக ஏற்பாட்டைச் செய்தால் அந்த முட்டுக்கட்டையை நீக்க முடியும்.

ஐக்கிய நாடுகள் சபைக்கு இனப்பிரச்சினையை எடுத்துச் சென்றால் என்ன என்று ஒரு கேள்வி எழலாம்.

அங்கு பரிசீலனைக்குப் போன பலஸ்தீன, தென்னாபிரிக்க, ஈராக் - ஈரான் பிரச்சினைகளுக்கு நேர்ந்தகதி நமக்கு பாடமாக இருக்க வேண்டும்.

# தமிழர் - உரிமைப் போராட்டத்தில்
# முஸ்லிம்கள் - சிந்திக்கும் கட்டத்தில்

## ஒப்புநோக்குகிறார் லீக் பணிப்பாளர்

— அம்பாறை மாவட்டச் செய்தியாளர் —

"தமிழ் மக்கள் கடந்த 38 வருட காலமாக அனுபவித்து வந்த கஷ்டங்கள், துயரங்கள், புறக்கணிப்புகள் காரணமாகத்தான் இன்றைய போராட்ட நிலைக்கு வந்துள்ளனர்.

ஆனால் முஸ்லிம்களைப் பொறுத்தவரை நாம், இப்பொழுதுதான் எமது பிரச்சினைகளையிட்டு சிந்திக்கத் தொடங்கியிருக்கிறோம்.

காலப்போக்கில் சமாதானமாகவும், பேச்சு வார்த்தைகள் மூலமும் எமது பிரச்சினைகள், உரிமைகளையிட்டு சம்பந்தப்பட்டவர்களுடன் பேசுவோம், அவை வெற்றி அளிக்காதபட்சத்தில் நிலைமை எவ்வாறு மாறுமோ தெரியாது"

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் கிழக்குப் பிராந்தியப் பணிப்பாளர் ஜனாப் எம். ஐ. உதுமாலெவ்வை மேற்கண்டவாறு கூறினார்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் நிந்தவூர்ப் பற்று சம்மேளன வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சம்மேளனத் தலைவர் ஜனாப் ஏ. எம். அலியார் தலைமையில், நிந்தவூர் 4 ஆம் குறிச்சி அ. மு. க. பாடசாலை மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது.

கிழக்குப் பிராந்தியப் பணிப்பாளர் ஜனாப். உதுமாலெவ்வை தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

"முஸ்லிம்கள் இன்று அரசியல், பொருளாதார கல்வித்துறைகளில் பின் தங்கிய நிலையிலுள்ளனர். எம்மத்தியில் ஒற்றுமையின்மையே இதற்கு முக்கிய காரணமாகும்.

இந்த நிலையில் முஸ்லிம் இளைஞர்கள் சமூகத்தில் முன்மாதிரியாகத் திகழ வேண்டும். சமூகப் பற்றுடன், எமது இனத்திற்காகப் போராடுவதற்கும் இளைஞர்கள் தயங்கக் கூடாது

நாம் உரிமையுடன் வாழ வேண்டும். எமது பிரச்சினைகளை எடுத்துக் கூறும் வகை தெரிய வேண்டும்.

இந்த நாட்டிலுள்ள பெரும்பான்மை இனத்தவர்களான சிங்களவர்கள் மத்தியில் நான்கு இயக்கங்களும், 18 வீதம் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் ஐந்து இயக்கங்களும் இருக்கின்றன.

ஆனால் முஸ்லிம்கள் மத்தியில் 82 இயக்கங்கள் உண்டு. இந்த இயக்கங்கள் எல்லாம் என்ன செய்கின்றன? இத்தனை இயக்கங்களிலிருந்தும் எமது நிலையில் முன்னேற்றமில்லை.

எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இளைஞர்கள் தான் முன்வரவேண்டும். பௌத்த காங்கிரஸ் இந்த அரசுக்கு அறிவுறுத்தி செயற்படுத்துவது போல், நாம் நமது முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தூண்டி சமூகத்துக்காக சேவையாற்ற வைக்க வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்த வரை 1983ஆம் வருட கணக்கெடுப்பின்படி சிங்களவர்கள் 39 வீதமும் முஸ்லிம்கள் 45 வீதமும் தமிழர்கள் 19 வீதமும் வாழ்கின்றனர்.

ஆனால் இந்த மாவட்ட கச்சேரியில் (அரசாங்க அதிபர் செயலகத்தில்) மிக மிகக் குறைந்த தொகையினரே தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கடமையாற்றுகின்றனர்.

அதே போல் ஹிங்குராணை சீனித்தொழிற்சாலையில் பணிபுரியும் 5,672 தொழிலாளர்களில் 400பேர் மட்டுமே தமிழ் பேசும் தொழிலாளர்களாக இருக்கின்றனர்.

இதே போன்று இந்த மாவட்டத்தின் பலதரப்பட்ட நிர்வாக நடவடிக்கைகளிலும் தமிழ் பேசும் மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

1965 ஆம் ஆண்டில் இந்தமாவட்டத்திலுள்ள முஸ்லிம்களுக்குச்சொந்தமான 12,500 ஏக்கர் காணி இலங்கை சீனிக் கூட்டுத்தாபனத்தினால் சுவீகரிக்கப்பட்டது.

ஆனால் பின்னர் இந்தக் காணிகள் கூட்டுத்தாபன ஊழியர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தது மட்டுமன்றி, சிங்களவர்கள் அத்துமீறிக் குடியேறவும் வழங்கப்பட்டுள்ளது.

இன்று அரசாங்கத்தில் 11 முஸ்லிம் பிரதிநிதிகளும், எதிர்க்கட்சியில் ஒருவரும் இருக்கின்றனர். இவர்களைச் சமூகத்தில் அக்கறையுள்ளவர்களாகவும், எமது பிரச்சினைகளை உரிய இடங்களில் தட்டிக் கேட்கத்தக்க நிலைக்கும் நாம் தூண்டவேண்டும்.

—இவ்வாறு ஜனாப் உதுமாலெவ்வை கூறினார்.

## நெடுந்தீவு செல்லும் பிரயாணிகள் பாதிப்பு
### படகுச் சேவை நேர மாற்றம் காரணம்

நெடுந்தீவு, பெப் 25

நெடுந்தீவு பிரயாணிகள் மீண்டும் படகுச் சேவை நேர மாற்றத்தால் பெரும் கஷ்டத்துக்குள்ளாகினர்கள்.

காலை 7 மணிக்கு நெடுந்தீவில் இருந்து நெடுந்தீவு குறிகாட்டுவான் படகுச் சேவை தொடங்குகிறது.

குறிகாட்டுவானில் இருந்து மீண்டும் பிற்பகல் 2 45 மணிக்குப் புறப்பட்டு நயினாதீவு ஊடாகஇப்படகுச்சேவை நடைபெற்று வருகிறது.

21.2.86 அன்று தொடக்கம் பிற்பகல் 2 மணிக்கு ஆயுதப் படையினரின் பரிசோதனைக்கு நயினாதீவு செல்லவேண்டும் என்ற புதிய கட்டளை காரணமாக நெடுந்தீவு குறிகாட்டுவான் சேவையிலீடுபடும் படகு பிற்பகல் 1.45 மணிக்கே புறப்பட வேண்டிய கட்டாயத்துக்கு உட்பட்டுள்ளது

இந்த சேவைநேர மாற்றத்தால் நெடுந்தீவு செல்லும் பிரயாணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நெடுந்தீவு மக்கள் குறிகாட்டுவானிலிருந்து ஆரம்பிக்கும் சேவையை பிற்பகல் 3 மணிக்கு நீடிக்க வேண்டுமென நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபருக்கு வேண்டுகோள் விடுத்திருந்த வேளையில் இப்படியான முடிவை நயினாதீவில் உள்ள ஆயுதப் படையினர் எடுத்தது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வழமையாக காலை 7 மணிக்கு நெடுந்தீவில் இருந்து புறப்படும் பிரயாணிகள் நயினாதீவு ஆயுதப் படையினரின் பரிசோதனை காரணமாக யாழ்ப்பாணத்துக்கு காலை 10.30 மணிக்கே வந்து சேருவது வழமையாக இருந்தது.

தற்போதைய நேரமாற்றத்தால் நண்பகல் 12 மணிக்கே வந்து சேர வேண்டியுள்ளது.

இதனால் அரச அலுவலக வேலைகள், வியாபார, தனிப்பட்டவேலைகளை முடித்துக் கொண்டு இ பகுதி மக்கள் திரும்ப முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளதுடன் மறுநாள் தான் நெடுந்தீவு செல்ல வேண்டிய கஷ்டத்துக்கு உள்ளாகியுள்ளார்கள்.

## மருத்துவ, விஞ்ஞான கல்விக்கு ஆங்கில கல்வி அவசியம்

வட்டுக்கோட்டை, பெப். 25

மருத்துவம், விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றைப் பற்றிய அறிவை உடனுக்குடன் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் நிச்சயமாக ஆங்கில மொழியில் போதிய தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இவை பற்றிய அறிவு நூல்கள் அனைத்தும் ஆங்கில மொழியிலேயே வெளி வருகின்றன.

வட்டுக்கோட்டை கலா நிலைய முதல்வர் திரு. க. கயிலாயநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவன மாணவர் மன்ற விசேஷ கூட்டத்தில் "இன்றைய காலகட்டத்தில் ஆங்கிலக் கல்வியின் அவசியமும் அதை எவ்வாறு மாணவர்கள் இலகுவாகக் கற்கலாம் என்பது பற்றியும்" அவர் உரையாற்றினார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவன இயக்குநரும் மாணவர் மன்றப் போஷகருமான திரு எம். ஜோர்ஜ் பிள்ளைநாயகம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. கயிலாயநாதன் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது;-

உலகின் இருபது கோடி மக்கள் ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்று வருகின்றனர்.

மேலைத் தேசத்தில் இருந்து வெளி வருகின்ற விஞ்ஞான, தொழில் நுட்ப, மருத்துவ நூல்கள் யாவும் ஆங்கிலத்திலேயே வெளிவருகின்றன.

இதனாலேயே பாரதியாரும் "புத்தம் புதிய கலைகள் பஞ்சபூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும் மெத்த வளருது மேற்கே அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை. அவை சொல்லும் திறமை தமிழ் மொழிக்கு இல்லை மெல்லத் தமிழ் இனிச்சாகும்" என்று மிக வருத்தத்தோடு பாடியிருக்கிறார்.

ஆங்கிலங் கற்றலானது நான்கு முக்கிய படிமுறைகளை அடக்கியுள்ளது. கேட்டல், வாசித்தல், பேசுதல், எழுதுதல் ஆகிய இந்த நான்கு படிமுறைகளையும் நன்றாகக் கற்க வேண்டும்.

தமிழ் இலக்கணத்தை விட ஆங்கில இலக்கணமானது மிகவும் சுலபமானதும் விளக்கமுள்ளதுமாகும்.

ஆனால் உச்சரிப்பு, [illegible] பொருள் விளக்கம், வாக்கிய அமைப்பு, மொழி மரபு ஆகியவை ஆங்கிலத்தில் மிகச் சிக்கலானதாகும்.

ஆங்கிலத்தை இரண்டொரு மாதங்களிலோ அல்லது வருடங்களிலோ சுலபமாகக் கற்றுக் கொள்ள முடியாது. இதைச் சில ஆண்டுகளுக்காவது ஆங்கிலம் கைவரப் பெற்ற ஆற்றல் மிக்க ஆசிரியர்களிடம் [illegible] தாகும்.

இப்படி அவர் கூறினார்.

**பொய்யாமொழி**



குறள்:

வித்தும் இடல்வேண்டும் கொல்லோ
விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.

பொருள்:

விருந்தினரை முன்னே போற்றி உணவளித்து மிஞ்சிய உணவை உண்டு வாழ்கின்றவனுடைய நிலத்தில் விதையும் விதைக்க வேண்டுமோ?

## வருமுன் காப்பதற்கும் வந்தபின் செயற்படுவதற்கும் திட்டங்கள் தீட்டவேண்டும்

### பிரஜைகள் குழு அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரை

காங்கேசன்துறை, பெப்.25

மாவிட்டபுரம் பகுதி பாதுகாப்பு வலயத்திற்கு மிக அண்மித்த பகுதியாகவும், அடிக்கடி பதற்ற நிலை ஏற்படும் பகுதியாகவும் விளங்கி வருவதால் வருமுன் காப்பதற்கும், வந்தபின் செயற்படுவதற்கும் முன்கூட்டியேதிட்டங்களைத்திட்ட வேண்டும். இதற்கு பிரஜைகள் குழு ஒன்று மிக வும் அவசியமானது.

மாவிட்டபுரம் பிரஜைகள் குழு அங்குரார்ப்பணக் கூட்டம் மாவை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு தலைமை வகித்து உரையாற்றிய தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராசா மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டத்தில் மாவிட்டபுரம் பிரஜைகள் குழு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

அதன் நிர்வாகிகள் வருமாறு:-

தலைவர் திரு. சி. சிவமகாராசா உபதலைவர்கள் திரு. வ. வயிரவப்பிள்ளை, திரு. க. ஜீவேஸ்வரா, செயலாளர் திரு. தா. போஜன்.

11 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## பருத்தித்துறை சம்பவம் தொடர்கதையின் முதலாம் அத்தியாயம்
### அரச அதிபருக்கு கடிதம்

நாகர்கோவில், பெப். 25

பருத்தித்துறை நகரில் அண்மையில் ஏற்பட்டு வரும் அசம்பாவிதம் ஒரு தொடர்கதையின் முதலாம் அத்தியாயம்.

பருத்தித்துறை வர்த்தகர்கள் யாழ். அரசாங்க அதிபருக்கு பருத்தித்துறைப் பிரஜைகள் குழு ஊடாக அனுப்பிய கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

பருத்தித்துறை நவீன சந்தைக்கு அப்பால் அரைமைல் தொலைவிலிருந்த வடமராட்சி வடக்கு, கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையை எவ்வித முன்னறிவித்தலுமின்றி கரவெட்டி உதவி அரசாங்க அதிபரின் எல்லைக்குட்பட்ட புலோலி கமநல சேவைக் கட்டடத்திற்கு இடம்மாற்றம்செய்ய தங்களால் வழங்கப்பட்ட அனுமதி தவறானதாகும்.

இப்பணிமனைக்கு வடக்கிலேயே பல அரச தனியார் நிறுவனங்கள் இன்றும் இயங்கி வருகின்றன.

இப்பகுதியில் பல்லாயிரம் பொதுமக்கள் வசித்து வருகின்றார்கள். வடமராட்சிப் பகுதியின் தொன்மையான அருள் மிகு சிவன்கோயிலில் சகல கால பூசைகளும் எவ்வித தடங்கலுமின்றி நடைபெற்று வருகின்றன.

தாங்கள் அனுமதி வழங்கியதால் அக்காரியாலயம் இடம்மாறியது. இது நீங்கள் பருத்தித்துறை மக்களுக்குச் செய்த துரோகம் என வர்த்தகர்களாகிய நாம் தெரிவிக்கின்றோம்

மேலும் பருத்தித்துறைப் பிரஜைகள் குழுவின் கோரிக்கைக்கிணங்க உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஏற்கனவே இயங்கியகட்டடத்திற் செயற்பட ஆவன செய்ய வேண்டும்.

அவ்வாறு செய்தால் பருத்தித்துறை நவீன சந்தையும் அதன் சுற்றுடலிலுள்ள அரச நிறுவனங்களான வங்கிக் கிளைகளும் ஏனைய தனியார் வர்த்தக நிலையங்களும் மீண்டும் இயங்க முடியும்.

## வித்தாரம்

வாரும், வாரும் முரளி!

என்ன ஏதோ கூச்சப் படுமாப்போலை கிடக்கு

இந்தக் காலத்திலை எங்கடை பெட்டையளே கூச்சம், நாச்சம் எல்லாத்தையும் ஒரு பக்கத்திலை மூட்டை கட்டி வைச்சுப்போட்டு, சைக்கிள் என்ன, ஸ்கூட்டர் என்ன, சி - 90 என்ன என்று ஏறி, சுத்தாத சுத்தெல்லாம் சுத்தித் திரியுதுகள். அந்த அளவுக்கு உலகம் முன்னேறிக் கொண்டு போகுது நீ ஆம்பிளைப் பிள்ளை கூச்சப்படுகிறாய்.

ஓ நீ மேலாலை போன "தாவல் குருவியை"ப் பார்த்துப் பயந்து போனியோ எட அதே சமாச்சாரம்?

பிளேனுகள் வந்து தான் குண்டுபோடும் எண்டு நினைக்கிற காலமில்லை இது

ஹெலிக்கொப்டர் ("தாவல் குருவிகள்") குண்டு போட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒண்டும் இல்லை அப்பா.

கெரில்லா யுத்தங்களிலை பாவிக்கிறதுக்கு எண்டு அமெரிக்கா புது விதமான யுத்த விமானங்களை உற்பத்தி செய்திருக்கு அந்தப் புதினம் தெரியுமோ உனக்கு?

அந்த விமானங்களுக்கு என்ன பேர் தெரியுமே? இங்கிலீஷிலையே சொல்லுறேன்: Monkey Aircraft – மங்கி எயர்கிருப்ட் தான் அதுகின்ரை பெயர்.

கெரில்லா என்றால் ஒரு வகைக் குரங்கு, மறைந்திருந்து தாக்குதல் நடத்தும் போர் முறைக்கு அதாலைதான் கெரில்லா யுத்தம் எண்டு பேர் வைச்சவை.

அமெரிக்கா பாத்திச்சு கெரில்லாக்களை அதாவது தீவிரவாதிகளை அல்லது பயங்கரவாதிகளைத் தாக்குகிற விமானத்துக்கு மங்கி — அதாவது குரங்கு எண்டு பேர் வைச்சுவிட்டுது.

அதுமட்டுமே தங்கடை மங்கி எயர்கிருப்டை விற்பனையாக்கிறதுக்காக இயன்ற வரைக்கும் பிற நாடுகளிலை பயங்கரவாதத்தை — கெரில்லாக்களை உருவாக்கி விடக்கூடும். ஆர்கண்டது?

அதெல்லாம் போகட்டும். எனக்கு ஒரு சின்னச் சந்தேகம் தாவடி, உரும்பராய் சம்பவங்களிலை வந்து கரணம் போட்டது உந்த "மங்கி" தானோ எண்டு நான் நினைச்சன்.

மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுறதிலை உந்த றிப்போட்டர்மார் கெட்டிக்காரர் எண்டு நீங்கள் நினைக்கக்கூடும்.

இலங்கையோடு இருக்கிற நட்புறவிலை சும்மா குடுக்காவிட்டாலும், காசுக்காகவாவது மங்கி எயர்கிருப்டுகளை அமெரிக்கா குடுத்திருக்கும்.

உந்த எயர் கிருப்டிலை யுத்தத்துக்குத் தேவையான சகல நவீன சாதனங்களும் பொருத்தி இருக்கெண்டும் கேள்வி.

சரி இன்னும் இரண்டொரு நாளையிலை உந்த 'மங்கி' இஞ்சை வந்து நிக்கிதோ இல்லையோ எண்டதை எப்பிடியும் அறிஞ்சு சொல்லுறனே.

முந்தநாளும் நேற்றுப் ரவுணிலை றொக்கெட் மாதிரி ஒரு சாமானை வில்சர் சந்தியிலை இருக்கிற பெற்றோல் ஷெட் மூலையிலை கட்டி யிருந்திலம் பாத்தனியே.

நாலடி உயரமிருக்கும் முன்னுக்கு கூரான முனை, வாலடியில் செட்டையள்.

இரண்டு நாளாய் எக்கச்சக்கமான சனம் பாத்திதுகள்.

ஒரு காலத்திலை அது நூதனசாலையிலையும் கண்காட்சியளிலையும் இடம் பெற்றாலும் ஆச்சரியப் படுறதுக்கு ஒண்டுமில்லை.

**கொண்டோடி**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஆரம்பம்:
1 - 3 - 1986 (சனி) 9.00 a.m.
JAFFNA
Technical Institute
52/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ரெயில்வே கடவை அருகாமை)
141, கண்டி றோட், சாவகச்சேரி.
தபால் கந்தோர் வீதி,
(தபால் கந்தோர் அருகாமை)
நெல்லியடி — கரவெட்டி.


# உதயன்

25. 02. 1986


COMPUTER PROGRAMMING
* BASIC — COBOL
[ Duration: 5 Months ]
* 50 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
* குறிப்பிட்ட மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.
* அச்சிடப்பட்ட பாடக் குறிப்புகள் வழங்கப்படும்.

தெஹிவத்தை தாக்குதல்

## விடுதலைப் புலிகள் உரிமை கோருகிறது

சென்னை, பெப், 24 தமிழர் கிராமத்தில் இருந்த தமிழரை விரட்டிவிட்டு சிங்களவரைக் குடியமர்த்த கொண்டு சென்றபோதே தெஹிவத்தை கண்ணி வெடித் தாக்குதலை தமிழீழ விடுதலைப் புலிகள் பெப்ரவரி 19 ஆம் திகதி மேற்கொண்டது.

இப்படி தமிழீழ விடுதலை இயக்கம் சென்னையில் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டது.

அல்லை-கந்தளாய் வீதியில் வைத்து நடந்த இத் தாக்குதலில் 55 ஊர்காவல் படையினரும் 25 இராணுவத்தினரும் ஆக மொத்தம் 80பேர் கொல்லப்பட்டனர்.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் அறிக்கையில் கூறியுள்ளது.

## ஈரோஸ் ஊர்ஜிதம்

சென்னை, பெப். 24 பெப்ரவரி 19 இல் தெஹிவத்தையில் நடந்த கண்ணி வெடித் தாக்குதல்களில் இறுதியாக நடந்த தாக்குதலை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே நடத்தியது.

இப்படி ஈழப் புரட்சி அமைப்பின் பொது ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அந்த அறிக்கை வருமாறு;

பெப்ரவரி 19இல் தெஹிவத்தையில் மூன்று முறைத் தாக்குதல்கள் நடந்தன.

இவற்றில் இறுதியான தாக்குதலை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே மேற்கொண்டு இருந்தது.

இத் தாக்குதல் தொடர்பாக எமக்கு விடுதலைப் புலிகள் தந்த விவரத்தில் பல வாகனங்களில் 25 இராணுவத்தினரும் 55 ஊர்காவல் படையினரும் வந்தபோது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதில் 80 பேர் கொல்லப்பட்டதாக அறியக் கூடியதாக உள்ளது.

## இசை ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம், பெப், 25 இசை ஆசிரியர்களாக ஆறு பேர்கள் நியமிக்கப்பட்டனர்.

அனைவரும் யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவிகள் ஆவர்.

பொலன்னறுவ றோயல் கல்லூரியில் இவர்கள் பயிற்சி பெற்றனர்.

இசை ஆசிரியர்களின் பெயர்கள் வருமாறு:

செல்விகள்; எஸ். கௌரி, என்.எம். வர்ணலாதேவி, கே. சிவகுமாரி, எஸ்.ஜசிந்தா, தி ஹேமாவதி, ரி.வாசுகி, எஸ் குமுதினி.

## பிக்பொக்கட்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

சிலர் இவரைப் பின் தொடர்ந்து சென்று விசாரித்ததில் விடயம் அம்பலமானதாம்.

நேற்று 12 மணி அளவில் யாழ். நவீன சந்தைக்கு முன்பாக உள்ள ஔவையார் சிலைக்கு அருகில் கட்டப்பட்ட இவர் பின்னர் வேறு இளைஞர்களினால் அவிழ்த்து விடப்பட்டார்,

## லொறிகள்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு, கிழக்கில் உள்ள இராணுவ முகாம்களின் பொறுப்பு அதிகாரிகளுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

வடக்கு, கிழக்கிலிருந்து செல்லும் லொறிகள் கடுமையாகச் சோதனை செய்யப்பட வேண்டும்–

சாரதி சமர்ப்பிக்கும் பொருள் விவரப் பட்டியலுக்கும், உள்ளே இருக்கும் பொருள்களுக்கும் வித்தியாசம் இருப்பின் அவை சந்தேகத்தின் பேரில் கைப்பற்றப்பட்டு, அருகில் உள்ள முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு ஊர்ஜிதம் செய்யப்பட்டு, பறிமுதலாக்கப்பட வேண்டும். —

சம்பந்தப்பட்ட லொறிச் சாரதி, உதவியாளர்கள் மீது பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரவும் ஏற்பாடு செய்வது அவசியம் – இவ்வாறு அந்த அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறிய வருகிறது.

நவா மினி
(உஷா மினி முன்பாக)
248/5, K. K. S. Road,
JAFFNA.
" ரம்போ "
RAMBO
* 1985ம் ஆண்டில் உலக ரீதியில் வசூலைக் கொடுத்த படம்.
* இதுவரை நீங்கள் பார்த்திருக்க முடியாத ஒறிஜினல் பிரதியில் முதன் முறையாக.
(12 30.9 00.FirstBloodI)

தங்கவேலாயுதபுரம் செல்வதை

# பிரஜைகள் குழு கைவிட்டது

## இணைப்பு அதிகாரியின் சந்திப்பை அடுத்து

மட்டக்களப்பு, பெப்25 மட்டக்களப்பு இணைப்பு அதிகாரியைச் சந்தித்ததைத் தொடர்ந்து, தங்கவேலாயுதபுரம் போகும் திட்டத்தை மட்டக்களப்புப் பிரஜைகள் குழு கைவிட்டது.

நேற்று தங்கவேலாயுதபுரம் சென்று பாதிக்கப்பட்டவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்ய மட்டக்களப்புப் பிரஜைகள் குழு முன்னர் திட்டமிட்டிருந்தது. அதன்படி, நேற்று குழுவின் தலைவர் திரு. தங்கவடிவேல், செயலாளர் திரு. சாம் தம்பிமுத்து, உபதலைவர் வண. பிதா சந்திரா பெர்னாண்டோ ஆகியோர் புறப்பட ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்த சமயத்தில், தன்னைச் சந்திக்குப்படி அவர்களுக்கு இணைப்பு அதிகாரியிடம் இருந்து திடீர் அழைப்பு வந்தது.

அதற்கிணங்க இணைப்பதிகாரியை அவர்கள் நேற்றுச் சந்தித்தனர்.

தங்கவேலாயுதபுரம் சம்பவத்தில் கொலையுண்டவர்களின் பெயர்கள் மற்றும் விவரங்களை அச்சமயம் இணைப்பதிகாரியிடம் குழுவினர் சமர்ப்பித்தனர்.

அதன் பின்னர் தங்கவேலாயுதபுரம் செல்லும் திட்டத்தை பிரஜைகள் குழு கைவிட்டது.

(முன்வந்த செய்தி 2ஆம் பக்கத்தில்)

## மிருக வேட்டைக்கு கூட சட்டம் ஒன்று இருக்கிறது

### மனிதவேட்டைக்கு அது இல்லை

கல்முனை, பெப். 25 காட்டு மிருகங்களை வேட்டையாடுவதற்குக் கூட சட்டம் உண்டு. ஆனால் மனிதனை மனிதன் கொல்வதற்கு ஒரு விதிமுறைகூட இல்லையா?

இலங்கை அஞ்சல் தொலைதொடர்பு உத்தியோகத்தர் சங்கத்தின் அம்பாறை – கல்முனை மாவட்டக் கிளைச் செயலாளர் திரு. இ. திருநாவுக்கரசு மேற்கண்டவாறு கேட்டார்.

கிளை நிர்வாக சபைக் கூட்டத்தில் திரு. திருநாவுக்கரசு, இனப்பிரச்சினைக்கு அவசரதீர்வு ஒன்றைக்காண அரசு முன்வர வேண்டும் என்ற பிரேரணையை முன்மொழிந்து பேசினார்.

மேலும் அவர் பேசுகையில், இப்படியான படுகொலைகளினால் மனித வளமும் மனித சக்தியும் அழிந்து கொண்டு போகும் நிலைதான் ஏற்பட்டுள்ளது - என்று குறிப்பிட்டார்.

பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கிளைத் தலைவர் திரு. ஏ. குணரத்தினம் தலைமை வகித்தார்.

## கிளிநொச்சியில் ஆலோசனைக் கூட்டம்

கிளிநொச்சி,பெப்,25 கிளிநொச்சியில் தொடரும் இராணுவ அட்டூழியங்களைக் கட்டுப்படுத்த எடுக்கக் கூடிய பொருத்தமான நடவடிக்கை குறித்து ஆராய்வதற்காக கிளிநொச்சி பிரஜைகள் குழு இன்று ஆலோசனைக் கூட்டம் ஒன்றை கூட்டுகிறது.

இன்று பிற்பகல் 2. 00 மணிக்கு கரடிப்போக்கு விஞ்ஞானக் கல்வி நிலையத்தில் இந்தக் கூட்டம் நடைபெறும்.

கிளிநொச்சிப் பிரஜைகள் குழுத்தலைவர் டாக்டர் கே. சுப்பையா தலைமையில் கூட்டம் நடைபெறும்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் செயற்படும் சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், தனியார் துறையினர், தொழிற்சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், மாதர் முன்னேற்றச் சங்கங்கள், பிரஜைகள் குழுக்கள், பாடசாலைகள், மாணவர் அமைப்புகள், கூட்டுறவுச் சங்கங்கள், சமூகமதஸ்தாபனங்கள், பொது அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோரை இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## அலரிக்காய் உட்கொண்டு மரணம்

நல்லூர். பெப் 25 சீனியுடன் கலந்து அலரிக்காய் சாப்பிட்டவர் பரிதாப மரணமடைந்தார்.

இராசையா பரமநாதன் என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இவர் அரியாலையைச் சேர்ந்தவர்.

மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையான இவர் சம்பவதினம் தனது மனைவியை வெற்றிலை வாங்கி வருவதற்காக கடைக்கு அனுப்பி விட்டு அலரிக்காயை சீனியில் கலந்து சாப்பிட்டார் என்றும் கூறப்படுகிறது

இவரது மரணவிசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி க கேசவன் நடத்தினர்.

தற்கொலை என தீர்ப்பு வழங்கப்பட்டது.

இன்று முதல்

## மூன்று தினங்களுக்கு அகதிகளுக்கு பொருள் சேகரிப்பு

யாழ்ப்பாணம், பெப் 25 "அகதிகள் நிவாரணத்துக்கு உதவுங்கள்" என்ற தலைப்பில் ஈ. பி. ஆர். எல். எவ். நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

பிராந்தியச் செயலாளர் தோழர் நாதனால் ஒப்பமிடப்பட்ட பிரஸ்தாப அறிக்கை முழு விவரம் வருமாறு:-

அன்பிற்குரிய வர்த்தகப் பெருமக்களே!

ஸ்ரீலங்கா அரசின் இராணுவ வெறியாட்டத்தால் உடைமைகளை இழந்து அகதிகளாக்கப்படும் மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமுள்ளது.

அகதி முகாம்களுக்கும் அரசு உதவிகளை நிறுத்தி எமது மக்களைப் பசிப்பிணியிலும், நோய்நொடியிலும் சாகடிக்கின்றது

குறிப்பாக திருமலை மாவட்டத்தின் அகதி முகாம்களில் மக்கள் இலை குழைகளை உண்ண வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஏனைய மாவட்டங்களிலும் அகதிகளாக்கப்பட்ட மக்களின் நிலை மிக மோசமடைந்துள்ளது.

இந்நிலையில் தங்களாலான பங்களிப்பைச் செலுத்துமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம். உணவுப் பொருள்களையும் (அரிசி, மா, பருப்பு...); ஆடைவகைகளையும் பெருமளவில் தந்துதவுமாறு வேண்டுகின்றோம்

(குறிப்பு:— கையொப்பமிடப்படாத "போட்டோஸ்ரற்" பிரதிகள் போலியானவை. இன்று (25 2. 86) முதல் நாளை மறுநாள்வரை (27 2 86) மட்டுமே எமது தோழர்கள் இச்சேகரிப்பில் ஈடுபடுவர் என்பதை அறியத் தருகின்றோம்.

## கற்பிட்டியில் சிங்கள மீனவர்

கொழும்பு, பெப். 25 நாயாறு, கொக்கிளாய்ப் பகுதிகளில் இருந்து வெளியேறிய சிங்கள மீனவர்கள் கற்பிட்டியிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் குடியமர்த்தப்படுவர்.

அரசின் நிதி உதவியுடன் மீண்டும் கொக்கிளாய், நாயாறு பகுதிகளுக்கு அனுப்பப்பட்ட சில சிங்கள மீனவர்கள் கற்பிட்டிக்குத் திரும்பி விட்டனர்.

தீவிரவாதிகளின் துப்பாக்கிகளுக்கு அவர்களை இரையாக்க முடியாது— இப்படி கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா தெரிவித்தார்.

ஆகவே தான் சிங்கள மீனவ அகதிகளை கற்பிட்டிப் பகுதியில் குடியமர்த்த நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றும் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா சொன்னர்.

வெகுஜன ஆர்ப்பாட்டப் பேரணி:

## கடை அடைப்புச் செய்ய வர்த்தகர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 25 27 ஆம் திகதி வியாழக்கிழமை கடை அடைப்பை முழுமையாக நடத்தும்படி யாழ் வர்த்தகர்கள் சங்கம், வர்த்தகர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அன்றைய தினம் நடைபெறும் வெகுஜன ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொள்ளும்படியும் வர்த்தகர்களைச் சங்கச் செயலாளர் திரு. சி. நமசிவாயம் கேட்டுள்ளார்.

அதே சமயம் அன்றைய தினம் யாழ்நகரில் நடைபெறும் வெகுஜன ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொள்ளும்படி அகில இலங்கை இந்து சுருட்டுத் தொழிலாளர் சங்கம் தனது உறுப்பினர்களைக் கேட்டுள்ளது.

சங்கக் கூட்டத்தில் இது சம்பந்தமாகத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

சங்கத் தலைவர் திரு. ஆ. துரைராஜசிங்கம் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் சொன்னதாவது;

அரசாங்கம் இன்று தாக்குதல்களை அதிகரித்து வருகின்றது.

நாளுக்குநாள் தமிழ் மக்கள் பிணக்குவியல்களாக மாறுகின்றனர். அக்கிரமங்களை எதிர்த்துப் போராடும் நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இப்படி திரு. துரைராஜசிங்கம் சொன்னர்.

### பாடசாலையில் புதிய நூலகம்

யாழ்ப்பாணம், பெப். 25 வல்வை அ. மி. த. க. பாடசாலையில் நூலகம் ஒன்று பாடசாலை அதிபர் திரு வே குமாரசுவாமியால் திறந்து வைக்கப்பட்டது.

இந்தநூலகம் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் ஊக்கத்தினாலும் ஆக்கத்தினாலும் உருவாக்கப்பட்டது.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த ஷப்ரு உமா [illegible] 15, 2 ஆம் ஒழுங்கை [illegible] நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 25-02-1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டரங்கு

## மத்திய கல்லூரி அணி தொடர்ந்து இரண்டாவது வெற்றி

'செஞ்சுரி' பெறும் சந்தர்ப்பத்தை இழந்தார் 'விவே'

—விளையாட்டுச் செய்தியாளர்:- சண் ஜோன்சன்—

யாழ்ப்பாணம், பெப் 25 யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் ஆட்டத்தில் தொடர்ந்து இரண்டாவது வெற்றியைப் பெற்றிருக்கிறது.

நேற்று சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு எதிரான ஆட்டத்தில் யாழ் மத்திய கல்லூரி அணி 37 ஒட்டங்களால் வெற்றியீட்டியது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் மத்திய கல்லூரி ஒதுக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றது.

கே. விவேகானந்தன் சிறப்பாக ஆடி 96 ஓட்டங்களையும் கே. கலாவண்ணன் 19 ஓட்டங்களையும் எஸ். விஜயநாதன் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

பற்றிக்ஸ் அணித் தலைவர் எஸ். ஏ. கிளஸ்ரன் 4 விக்கெட்டுக்களையும் ஏ. ஜே. ஜெயகுமார் 2 விக்கெட்டுக்களையும். ஏ. எச். ரெட்ணனந்தன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் அணி 44 3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது

ஐ ஆர். பத்திநாதர், பி. ஆதவன், ஏ. எச். ரெட்ணனந்தன் ஆகியோர் முறையே 23, 19 22 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஏ. சிவச்சந்திரன் 4 விக்கெட்டுக்களையும், எஸ். விஜயநாதன், கே. விவேகானந்தன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

யாழ் மத்திய கல்லூரி. தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கு எதிரான முதலாவது ஆட்டத்தில் ஏற்கனவே வெற்றி பெற்றது தெரிந்ததே.

## பாக். முன்னணியில்; இலங்கை அணி தடுமாறுகிறது

கண்டி,பெப் 25 இலங்கைக்கு எதிரான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி முன்னணியில் நிற்கிறது.

தோல்வியை அணைக்கும் நிலையில் இலங்கை அணி தடுமாறுகிறது.

நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தின் போது இலங்கை அணியை விட முதல் இன்னிங்ஸில் 121 ஓட்டங்களை பாகிஸ்தான் அணி அதிகமாகப் பெற்றது.

இந்த மேலதிக ஓட்ட எண்ணிக்கை இலங்கை அணிமுதல் இன்னிங்ஸில் பெற்ற ஓட்டத்திலும் விட அதிகமானது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

முதலாம் நாள் ஆட்டத்தில் இலங்கை அணி 109ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது என்பது தெரிந்ததே.

முதல் நாள் முடிவில் 4விக்கெட் இழப்புக்கு 58 ஓட்டங்களைப் பெற்றிருந்த பாகிஸ்தான் அணி நேற்றையஆட்டத்தின் போது 230 ஓட்டங்களைப்பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

முடாஸர் நஸார் 81, சலீம் மாலிக் 54, வாசிம் அக்ரம் 19,அகமட் 28ஓட்டங்களையும் பெற்றனர்.

அஸந்த டி மெல், ரூமேஷ் ரட்நாயக்கா ஆகியோர் முறையே 48, 50 ஓட்டங்களுக்கு தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

நேற்றைய ஆட்டம் வெளிச்சம் போதாமையால் இடைநிறுத்தப்பட்டபோது இலங்கை அணி விக்கெட் இழப்பின்றி 7 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இலங்கை அணியின் சிறப்புத் துடுப்பாட்ட வீரர்களுள் ஒருவரான அமால் சில்வா முதலாம் நாள் ஆட்டத்தில் காயமடைந்திருந்தார். அவர் அந்த டெஸ்டில் தொடர்ந்து விளையாடுவது சாத்தியமில்லை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதுவரையில் இரண்டு நாள் ஆட்டத்தில் இரண்டு அணிகளினதும் முதல் இன்னிங்ஸ் ஆட்டம் முடிவடைந்து விட்டது

இன்னும் மூன்று நாள் ஆட்டம் பாக்கியாக இருக்கிறது. இந்த மூன்று நாட்களினுள் ஆட்டத்தில் ஒரு பக்கத்திற்கு வெற்றி கிடைப்பது உறுதி.

அனேகமாக வெற்றி பாகிஸ்தான் பக்கமே இருக்கும் என்று நம்பலாம்.

இந்த டெஸ்ட் ஆட்டம் கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடைபெற்று வருவது தெரிந்ததே.

## யாழ்ப்பாணக் கல்லூரி 29 ஓட்டங்களினால் வெற்றி

வீரசிங்கம் சிறப்பு ஆட்டம்

யாழ்ப்பாணம், பெப். 25 மட்டுப்படுத்தப் பட்ட ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் ஆட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி மானிப்பாய் இந்துக்கல்லூரி அணியை 29 ஓட்டங்களால் தோற்கடித்தது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 34.3 ஓவர்களில் 119 ஓட்டங்களையும் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

எஸ். அகஸ்ரின் 22 ஓட்டங்களையும் பி. சயந்தகுமார் 21 ஓட்டங்களையும் ஜி. ராகவன் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

பி.லவிந்திரா,ரி.வசந்தராஜா ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 39.5 ஓவர்களில் சகலவிக்கெட்டுக்களையும் இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றது

ஜே. வீரசிங்கம் சிறப்பாக ஆடி ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களைப் பெற்றார்.

நித்திய ரஞ்சன் 4 விக்கெட்டுக்களையும், எஸ். விஜயகுமார் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

### உரும்பராயில் உதைபந்தாட்டம்

நல்லூர், பெப். 23 உரும்பராய் மேற்கு திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான 15வது உதைபந்தாட்ட 'நொக்கவுட்' சுற்றுப் போட்டியின் கால்இறுதி ஆட்டம் தற்பொழுது உரும்பராய் திருக்குமரன் விளையாட்டரங்கில் விறுவிறுப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

நான்காவது கடைசி கால் இறுதி ஆட்டத்தில் பொற்பதி விளையாட்டுக் கழகம், சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகத்துடன் மோதும். இந்த ஆட்டம் நாளை 26 ஆம் திகதி நடைபெறும்

அரையிறுதியாட்டங்கள் எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றன.

## சென். ஜோன்ஸ் வெற்றி

சளைக்காமல் மோதிய கொக்குவில் இந்து

யாழ்ப்பாணம், பெப். 25 கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் ஆட்டத்தில் இறுதி நேரத்தில் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் சென் ஜோன்ஸ் கல்லூரி லாவகமாக விளையாடி ஒருவாறு தோல்வியைத் தவிர்த்துக் கொண்டது.

இறுதி வரை சளைக்காமல் ஆடிய கொக்குவில் இந்து கல்லூரி 19 ஓட்டங்களால் தோல்வி கண்டது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 46.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 191 ஓட்டங்களைப்பெற்றது.

பி. ஜே, ஆர். சின்னையா 69 ஓட்டங்களையும் ஏ. கணேஸ் பஞ்சன் 64 ஓட்டங்களையும் பெற்றனர்.

துஷ்யந்தன், கிருபானந்தன் ஆகியோர் முறையே 4.3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய கொக்குவில் இந்து அணி இறுதி நேரத்தில் அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்தது.

47.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது.